**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, ERANIEL**

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure, 1973/Chapter XXV of BNSS 2023, and Rule 42 and Judicial Form No. 53 of Criminal Rules of practice 2019 )

**CC..No. 238/2020 P.W. 4/( Additional Witness)**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | திரு. ராஜ்மோகன் | **Calling** | : | |
| **Father's Name** | : | த/பெ. | **Age** | : | |
| **Village** | : | | | | |
| **Taluk** | : | | | | |

**Solemnly affirmed in accordance with the provisions of Section 4 of Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the day 03.03.2026.**

**அரசுத்தரப்பு முதல் விசாரணை :**

**குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் ஆஜர். குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் ஆஜர்**

1. நான் தற்பொழுது குளச்சல் காவல் நிலையத்தில் தலைமை காவலராக பணி செய்து வருகிறேன். மேற்படி காவல்நிலையத்தில் தலைமை காவலராக பணிபுரிந்த சிறப்பு உதவி ஆய்வாளர் சுந்தர் ராஜ் மற்றும் ஆய்வாளர் முத்துராஜ் மற்றும் உதவி ஆய்வாளர் அமலராஜ் ஆகியோர்களை நன்கு தெரியும். அவர்களின் கையொப்பம் மற்றும் கையெழுத்தை நன்கு அறிவேன். வழக்கின் தன்மை கருதி வழக்கு கோப்புகளின் அடிப்படையில் சாட்சியம் அளிக்கிறேன்.

2. கடந்த 03.02.2018 ம் தேதி 9.00 மணிக்கு சிறப்பு உதவி ஆய்வாளர் நிலையப்பொறுப்பில் இருந்த போது அமலதாசன் என்பவர் நிலையம் ஆஜராகி புகார் மனு கொடுத்துள்ளார். **மேற்படி புகார் மனு அ.சா.ஆ-1 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. புகார் மனுவை பெற்று புகார் மனுவின் தன்மைப்படி காவல்நிலையக்குற்ற எண். 22/2018 சட்டப்பிரிவுகள் 457, 380 இ.த.ச 1860 ன் கீழ் வழக்குப்பதிவு செய்துள்ளார். **மேற்படி முதல் தகவல் அறிக்கை அசாஆ. 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** முதல் தகவல் அறிக்கையின் அசல் மற்றும் புகார் மனுவை கனம் குற்றவியல் நடுவர் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தும், நகல்களை சம்மந்தப்பட்ட உயரதிகாரிகளுக்கு அனுப்பி வைத்தும் ஒரு நகலை விசாரணைக்காக உதவி ஆய்வாளரின் பார்வைக்கும் வைத்துள்ளார்.

3. மேற்படி வழக்கு கோப்பை சிறப்பு உதவி ஆய்வாளர் அவர்களின் பார்வைக்கு வைத்ததை விசாரணைக்கு எடுத்துக்கொண்டு 03.02.2018 ம் தேதி 10.00 மணிக்கு வழக்கின் சம்பவ இடம்

சென்று சாட்சிகள் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு மாதிரி வரைபடம் மற்றும் பார்வை மகசர் தயார் செய்துள்ளார். **மாதிரி வரைபடம் அ.சா.ஆ. 3 மற்றும் பார்வை மகசர் அ.சா.ஆ.4 ஆகும்.** சாட்சிகளிடம் கையொப்பமும் பெற்றுள்ளார்.

4. பட்டியல் சாட்சிகள் 1 முதல் 7 ஆகியோரை தனித்தனியே விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். முதல் தகவல் அறிக்கைப்பதிவுச் செய்த சிறப்பு உதவி ஆய்வாளரை விசாரித்து வாக்குமூலம் பதிவுச் செய்துள்ளார். குற்றம் சுமத்தப்பட்ட நபரான சிவசங்கரை 30.07.2018 அன்று அதிகாலை 20.00 மணிக்கு கைது செய்து காலை 06.30 மணி அளவில் அவர்கள் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை சாட்சிகள் முன்னிலையில் ஆய்வாளர் பதிவுச் செய்துள்ளார். **மேற்படி ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்டபகுதி அ.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் தடயப்பொருளை அத்தாட்சி மூலம் கைப்பற்றி சாட்சிகளிடம் கையொப்பம் பெற்றுள்ளார். **அந்த அத்தாட் சி அ.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யபடுகிறது. அதற்கான படிவம் 91 அ.சா.ஆ. 7 , அதில் உள்ள தடய பொருள் அ.சா.பொ. 1ஆகும். மற்றொரு அத்தாட்சி அ.சா.ஆ.8 ஆக குறியீடு செய்யபடுகிறது. அதற்கான படிவம் 91 அ.சா.ஆ. 9 அதில் உள்ள தடயபொருள் அ.சா.பொ.2 மற்றும் அ.சா.பொ.3 ஆகும்.** பின்னர் சாட்சிகளை தனி தனியே விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார்.

5. இத்துடன் வழக்கின் விசாரணை முடித்து சம்பவம் உண்மை என தெரிய வந்ததால் குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் மீது குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

**குறுக்கு விசாரணை** :

சம்பவயிடம் செல்லாமலும் சாட்சிகளை சரிவர விசாரணை செய்யாமலும் புகார் மனுவினை முறைப்படி விசாரணை செய்யாமலும் நடக்காத சம்பவத்தை நடந்ததாக சித்தரித்து இவ்வழக்கானது தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றாலும் ஆஜர் குற்றம் சுமத்தப்பட்ட நபர்களுக்கும் இந்த வழக்கிற்கும் எந்த தொடர்ப்பும் இல்லை என்றால் சரியல்ல.

குறுக்கு விசாரணை - முடிக்கப்பட்டது.

சாட்சி சொல்லி என்னால் எடுத்துச் சொல்லப்பட்டு, தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் முன்னிலையில் மேற்படி சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரியானதென்று ஏற்கப்பட்டது.

நீதித்துறை நடுவர்,
இரணியல்.